பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

13 MAR 2001
மாநகராட்சி

# வலம்புரி
VALAMPURI

மங்கையரின் அழகுக்கு மேலும் அழகூட்டும் தங்க நகைகளை 22கரட்டில் பெற்றிட இன்றே நாடுங்கள்.
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி, 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1574)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 29 செவ்வாய்க்கிழமை 13-03 2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 84

## ★ சமாதானப் பேச்சுக்கான திகதியை நிர்ணயித்து

# எரிக்சோலிடம் புலிகள் அறிவித்தால் அரசு பேச்சை உடன் ஆரம்பிக்கும்

### அமைச்சர் ஜயரத்தின தெரிவிப்பு

(நமது பாராளுமன்ற நிருபர்)

**இனப் பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்நேரமும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிக்குமாறு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளோம். இதற்கான திகதி புலிகளால் நிர்ணயிக்கப்பட்ட பின் பேச்சுவார்த்தைக்கான கால அட்டவணையைத் தயாரிப்போம்.**

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி.எம்.ஜயரத்தின பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்;

அமைச்சர் டி.எம் ஜயரத்தின அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் திட்டமிட்டபடிபேச்சு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அரசு வழங்கும் பண உதவி ரெலோவுக்கு நிறுத்தம்

(கொழும்பு)

ரெலோ இயக்கம் அண்மைக் காலத்திலிருந்து தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதனாலும் கடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்காததாலும் இதுவரை காலமும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விஜயகுமாரதுங்காகொலை சந்தேக நபருக்கு 26ந் திகதிவரை மறியல்

[கொழும்பு]

விஜயகுமாரதுங்க கொலை தொடர்பாகக்கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபரை 26ம்திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

டபிள்யு என் தனபால என்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# ஜேர்மன் குடியரசுத் தலைவரை ஜனாதிபதி இன்று சந்தித்து பேசுவார்

### புலம்பெயர்ந்த தமிழர்களையும் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிக்ககுமாரதுங்க நான்குநாள் உத்தியோக பூர்வவிஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுஜேர்மனிசென்றுள்ளார். அவருக்கு அங்குசெங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது: ஜேர்மனியின்குடியரசுத் தலைவர் றொனால்ட் றோகட்மற்றும் சான்சலர் ஜெகாத்சுவாடர் ஆகியோரை ஜனாதிபதி இன்றுசந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்தும் வர்த்தக ரீதியான அணுகுமுறைகள் தொடர்பாகவும் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்.

அரசுக்கும் தமிழீழவிடுதலை புலிகளுக்கு மிடையிலுள்ள தற்போதைய உறவுகள் மற்றும்இனப்பிரச்சினை தீர்வு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பிந்துனுவெவ படுகொலை விசாரிக்க தனியாள் ஆணைக்குழு

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள தனிநபர் ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா நியமனம செய்துள்ளார்.

மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி எஸ் கே குணதிலகாவை நியமனம் செய்துள்ள ஜனாதிபதி 27 பேர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் 3மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். (வ)

## வவுனியாவில் வதிவிட அனுமதிக்கு எதிராக சத்தியாக்கிரகம்

(வவுனியா)

கடந்த ஒன்பது வருடகாலமாக வவுனியாவில் நடைமுறையில் இருந்து வரும் வதிவிட அனுமதிப் பத்திர முறைக்கும், எரிபொருளுக்கும் இருந்து வரும் கூப்பன் நடைமுறைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பாரிய அளவில் தொடர்ச்சியான சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனை அரசியல், சமூக பிரஜைகள்குழு மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளு

→ 8ஆம் பக்கம் பார்க்க

# வரவு செலவுத்திட்டத் தரவுகளில் எந்தவிதமான உண்மையுமில்லை

### பாராளுமன்றில் ரணில் உரை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளில் எந்தவிதமான உண்மையுமில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது;

வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனைகள் நடைமுறைக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# விடுதலைப் புலிகள் பலவீனமடையவில்லை; பலத்துடனும் உறுதியுடனுமே உள்ளார்கள்!

### பிரித்தானிய புலனாய்வுத்துறை தெரிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனமடைந்த நிலையில் இருப்பதாலேயே ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை செய்து வருகிறார்கள் என்ற இலங்கை அரசின் கூற்றை பிரித்தானியப் புலனாய்வுப் பிரிவினர் முற்றாக நிராகரித்துள்ளனர். இது தொடர்பாக லெப்டினன்ட் கேணல் மைடோலோமோர் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் புத்திக்கூர்மையும் யுத்தம் குறித்த தூரநோக்கும் கொண்டவர். மோதல்களைப் பிராந்திய மட்டத்துக்குள்ளேயே அவர் கட்டுப்படுத்தியுள்ளார்.

1983களில் இடம்பெயர்ந்தவர்களின் கணிசமான அளவு ஆதரவை விடுதலைப்புலிகள் பெற்றுக்கொண்டார்கள். 1986ல் இலங்கைப் படையினருடன் பெரும் மோதல்களைப் புலிகள் ஆரம்பித்தனர் மிகச்சமீபத்தில் சர்வதேச ரீதியான ஆதரவைப் (8ம் பக்கம் பார்க்க)

## சிற்றி ஒவ் றிங்கோ இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

''சிற்றிஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல், இன்று 400 பயணிகளுடன், காங்கேசன் துறையிலிருந்து திருமலை நோக்கிச் செல்லும்.

இக்கப்பலில்பயணம் செய்ய பயண அனுமதி மற்றும் பயணச் சீட்டு பெற்றவர்கள் இன்று காலை 7 00 மணிக்கு பயண ஆவணங்களுடன், யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள ரான் அலுவலகத்துக்கு வருமாறு ரான் அதிகாரி எஸ். குகராஜன் கேட்டுள்ளார். [இ]

# சமாதானத்தில் புலிகள் நாட்டம்

# புலம்பெயர் தமிழர் விருப்பமும் இதுவே

## பரராஜசிங்கம் எம்.பி. எருத்துரைப்பு

(கொழும்பு)

கனடா மற்றும் பிரித்தானியாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்த் தலைவர்கள சமாதான முயற்சிகளைப் பெரிதும் விரும்புகின்றனர். விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சியில் உறுதியாகவே உள்ளனர்.

கனடா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கு, அண்மையில் விஜயம் செய்து. கொழும்பு திரும்பியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் யோசெப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழீழ விடுதலைப் புலிகள், பலமிழந்திருக்கின்றனர் அதனாலேயே அவர்கள் சமாதானத்தை விரும்புகின்றார்களென்பது தவறான கருத்து.

அவர்களிடம் உண்மையாக சமாதானத்தில் விருப்பம் உள்ளது:

மூன்று மாத காலமாக யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்ற புலிகள், அதனை இடையில் நிறுத்திக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் அரசியல் தீர்வையே புலிகள் பெரிதும் விரும்புகின்றனர்.

சர்வதேச சூழ் நிலைகள் விடுதலைப்புலிகளை இந்த நிலைப்பாட்டிற்கு இட்டு வந்திருக்கின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (உ-இ)

## விளக்கு வைத்தல் பூஜை

(சங்கானை)

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த விளக்கு வைத்தல் பூஜை மற்றும் பொங்கல் நிகழ்வு என்பன இன்று இடம்பெறவுள்ளன.

செஞ்சொற் கொண்டல் ஆறு திருமுகனின் "தேவி பாகவதம்" என்ற தலைப்பிலான தொடர் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது: (உ-124)

## கடற்படை அனுமதி பெறாது தீவகத்திற்கு செல்வது தண்டனைக்குரிய குற்றம்

(ஊர்காவற்றுறை)

கடற்படையின் அடையாள அட்டை அல்லது தற்காலிக அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் தீவகத்திற்குள் நுழையும் போது அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்ற பின்பே செல்ல முடியும் என தீவுப் பகுதிகடற்படையினர் புதியநடைமுறை ஒன்றினை ஏற்படுத்தியுள்ளனர்.

அனுமதிப்பத்திரம்பெறாது தீவுப்பகுதிக்குள் யாராவது நுழைவது தண்டனைக்குரிய குற்றமாகும். உடனடியாக அவர் கைது செய்யப்படுவார் என்பதை விளக்கும் எச்சரிக்கை விளம்பரம் ஒன்றும் இலங்கை கடற்படையின் தீவுப்பகுதிக்கட்டளை அதிகாரியினால் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில்தமிழில் போடப்பட்டுள்ளது: (உ-75)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது:

| | |
|---|---|
| 183446 ஏ | 183473 ஏ |
| 184874 ஏ | 184875 ஏ |
| 184908 ஏ | 184981 ஏ |
| 185015 ஏ | 185021 ஏ |
| 185061 ஏ | 185068 ஏ |
| 185068 பி | 185076 ஏ |
| 185090 ஏ | 185119 ஏ |
| 185153 ஏ | 185162 ஏ |
| 185167 ஏ | 185181 ஏ |
| 185187 ஏ | 185200 ஏ |
| 185214 ஏ | 185214 பி |
| 185214 சி | 185214 டி |
| 185223 ஏ | 185256 ஏ |
| 185263 ஏ | 185311 ஏ |
| 185311 பி | 185311 சி |
| 185311 டி | 186914 ஏ |

### சங்கானை

| | |
|---|---|
| 178757 ஏ | 181439 ஏ |
| 181511 ஏ | 182770 ஏ |
| 183093 ஏ | 183363 ஏ |
| 183376 ஏ | 183376 பி |
| 183386 ஏ | 183386 பி |
| 183404 ஏ | 183404 பி |
| 183454 ஏ | 183417 ஏ |
| 184906ஏ | 184841 ஏ |
| 185082 ஏ | 184906 பி |
| 185088 ஏ | 185082 பி |
| 185088 சி | 185088 பி |
| 185096 ஏ | 185088 டி |
| 185096 சி | 185096 பி |
| 185109 ஏ | 185097 ஏ |
| 185111 ஏ | 185110 ஏ |
| 185297 ஏ | 185137 ஏ |
| | 185297 பி |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 14599 ஏ | 14599 பி |
| 14635 ஏ | 14752 ஏ |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 14555 ஏ | 14555 சி |
| 14636 ஏ | 14675 ஏ |
| 14675 பி | 14686 எ |
| 14686 பி | 14686 சி |
| 14715 ஏ | 14722 ஏ |
| 14722 பி | 14733 எ |
| 14756 பி | 14756 சி |
| 14761 ஏ | 14806 ஏ |
| 14806 பி | 14807 எ |
| 14807 பி | 14807 சி |
| 14808 ஏ | 14808 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 178785ஏ | 181542 ஏ |
| 181542 பி | 181543 ஏ |
| 181543 பி | 181543 சி |
| 181553 ஏ | 181553 பி |
| 183168 ஏ | 183168 பி |
| 183168 சி | 183168 டி |
| 183469 ஏ | 183469 பி |
| 183469 சி | 183899 பி |
| 184845 ஏ | 184845 பி |
| 184882 ஏ | 184882 பி |
| 184882 சி | 184882 டி |
| 184882 ஈ | 184899 ஏ |
| 185106 ஏ | 185157 ஏ |
| 185171 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 185300 ஏ | 176806 ஏ |
| 176806 பி | 176806 சி |
| 176806 டி | 179456 ஏ |
| 182823 ஏ | 183060 ஏ |
| 183274 ஏ | 183323 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 150727 ஏ | 150727 பி |
| 150727 சி | 178858 ஏ |
| 179374 எ | 179447 ஏ |
| 179447 பி | 179447 சி |
| 179447 டி | 179447 ஈ |
| 181469 ஏ | 181469 பி |
| 181642 ஏ | 183226 ஏ |
| 183474 ஏ | 185310 ஏ |
| 185310 பி | 185310 சி |

### உடுவில்

| | |
|---|---|
| 183248 ஏ | 183400 ஏ |
| 184786 சி | 184833 ஏ |
| 184833 பி | 184840 ஏ |
| 184840பி | 184840 சி |
| | 184840 டி |
| 184876 ஏ | 184876 பி |
| 184977 ஏ | 185020 ஏ |
| 185020 பி | 185031 ஏ |
| 185039 ஏ | 185128 ஏ |
| 185118 பி | 185134 ஏ |
| 185179 ஏ | 185324 ஏ |
| 185324 பி | |

### வேலணை

| | |
|---|---|
| 14559 ஏ | 14559 பி |
| 14559 சி | 14559 டி |
| 14564 ஏ | 14564 பி |
| 14564 சி | 14564 டி |
| 14567 ஏ | 14567 பி |
| 14567 சி | 14589 ஏ |
| 14707 ஏ | 14708 ஏ |
| 14708 பி | 14711 ஏ |
| 14714 ஏ | 14714 பி |
| 12714 சி | 14717 ஏ |
| 14717 பி | 14719 ஏ |
| 14719 பி | 14719 சி |
| 14719 டி | 14720 ஏ |
| 14721 ஏ | 14743 ஏ |
| 14743 பி | 14743 சி |
| 14746 எ | 14747 ஏ |
| 14747 பி | 14747 சி |
| 14749 பி | 14749 ஏ |
| 14750 ஏ | 14749 சி |
| 14778 ஏ | 14776 எ |
| 14778 சி | 14778 பி |
| | 14792 ஏ |

## பொன் விழா நிகழ்வுகள் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

இலங்கை விமானப்படையினரின் பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டம் இன்றுடன் நிறைவு பெறுகிறது:

கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவந்தஇப்பொன்விழாக் கொண்டாட்டங்களில் இலங்கை-இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் பலவும் சாகச விளையாட்டுக்களில் ஈடுபட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது: (உ-9)

## கிளினிக்கில் காத்திருந்த பெண்ணின் பணப்பையை களவாடிய பெண்

(யாழ்ப்பாணம்)

யா/போதனா வைத்தியசாலையின் கிளினிக்கில் காத்திருந்த பெண்மணி ஒருவர் தன்னுடன் வைத்திருந்த பணப்பையை திருட்டுப் பேர்வழியிடம் பறிகொடுத்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி பெண்மணிக்கு அருகில் இருந்த பெண்ஒருவரே அவரது கைப்பையை திறந்து பணப்பையை எடுத்ததாகவும், உரிமையுடையவர்என எண்ணியதால்தாம் அதனைப் பொருட்படுத்தவில்லை எனவும் அருகில் இருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பணத்தைப் பறிகொடுத்த பெண்மணியின் அடையாள அட்டைகளும் திருட்டுப்போய்யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

## இலட்ச அர்ச்சனை

(கந்தர்மடம்)

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தில் கடந்த ஞாயிறு தொடக்கம் 20ந்திகதி செவ்வாய்கிழமை வரை இலட்சார்ச்சனை நடைபெறும்.

21ந்திகதிபுதன்கிழமை சங்காபிஷேகம் திருவூஞ்சல், திருவிளக்குப் பூசை என்பனவும் இடம்பெறும். (உ-37)

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நிறுவன அதிபர் எஸ்.சிவரூபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க துணைப் பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். [இ]

## செயலமர்வு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்-3 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை முதல் 14 திகதி புதன்கிழமை வரை பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பாடசாலை ஆசிரியர்களிற்கு யா/வட இந்துமகளிர் கல்லூரியிலும் மருதங்கேணி கரவெட்டி கோட்ட ஆசிரியர்களிற்கு நெல்லியடி ஆசிரியர் நிலையத்திலும் நடைபெற்று வருகின்றது. (உ-42)

## இராசி பலன்

13.3.2001

(மாசி 29, செவ்வாய்)

சதுர்த்தி மாலை 5 47வரை
சுவாதி மு.இ.10 52 வரை
ராகு காலம் 3.22 - 4.52
சுப நேரம் 10.52 - 12.22
சித்தம், சங்கடகர சதுர்த்தி

**மேடம்**
விருந்துபசாரம், பிரயாணம், காரிய ஜெயம், தன வரவு.

**இடபம்**
திடீர் பயணம், சத்துரு ஜெயம், வியாதி குணமடைதல் முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
வியாபார மேன்மை, குடும்பக் கவலை, நிலை மாற்றம், வியாதி.

**கடகம்**
தன்நம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், அதிகாரிகள் வெறுப்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, காரியம் கைகூடும், பிரயாணம்.

**கன்னி**
வாக்குக் கலகம், முயற்சி தாமதம், தன விரயம், கௌரவக் குறைவு.

**துலாம்**
கற்பனை மிகுதி, ஆரோக்கிய நிலை, ஜனவசியம், முயற்சி கை கூடும்.

**விருச்சிகம்**
பிரயாணம், தனவிரயம், சயன சுகக் குறைவு, காரிய தாமதம்.

**தனுசு**
கீர்த்தி, தன லாபம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கை கூடும்.

**மகரம்**
தொழில் மேன்மை, அதிகாரம், பெரியோர் சந்திப்பு, காரிய நன்மை.

**கும்பம்**
பிரயாணம், ஞாபக மறதி, அச்ச நிலை, முயற்சி தாமதம்.

**மீனம்**
பிரயாண பயம், காரியத் தடங்கல், வீண் பிச்சினை, வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## நாடு எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வரவு செலவுதிட்டத்தில்தீர்வுஇல்லை

### வரவு செலவுத்திட்ட விவாதத்தில் ரணில்

(கொழும்பு)

நாடு எதிர்நோக்கும்பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தற்போதைய வரவுசெலவுத் திட்டத்தில் தீர்வு ஏதும்வழங்கப்படவில்லை,

சாதாரண வருமானத்தில் தமது வாழ்க்கையைநடத்தும் மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளதன்றி அவர்களது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வளிக்கும் வகையில் இவ்வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப்பேசிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்,

வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப எதிர்பார்த்த வருமானங்களை பெற்றுக் கொள்ள முடியாது என்றுகுற்றம்சாட்டியுள்ளார்;

அத்துடன் நாட்டின்பொருளாதார ஸ்திரத்தன்மையை பேண இவ் வரவு செலவுத் திட்டம் வழிகோலாது எனவும், ரூபாவின் பெறுமதி மேன்மேலும் வீழ்ச்சியடையும் எனவும் குறிப்பிட்டார்.

நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமைத்துவ அமைச்சர் சரத்அனுகம தனது உரையில் அரசின் வரவு செலவுத் திட்டம் யதார்த்தமானதாய் இருப்பதுடன், தேசிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டது.

நாட்டின் அரசியல் பொருளாதார நிலைகளைக் கவனத்தில் கொண்டுதயாரிக்கப்பட்டது என வரவு செலவுத் திட்டத்திற்குச் சார்பாய்க் கருத்துக் கூறினார்.

இவ் விவாதத்தில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் அதிபர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ரூபன் பெர்னாண்டோ மற்றும் மத்திய வங்கி ஆளுநர் சி.எஸ்.ஜயவர்த்தன ஆகியோரும் பங்கு கொண்டனர். (உ-9)

## மணற்காடு, குடத்தனை மக்கள்
# குறைபாடுகளை நீக்கக் கோரி
# பல்வேறு அமைப்புகளுக்கு மகஜர்

(செம்பியன்பற்று)

மணற்காடு, குடத்தனைப் பிரதேசத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பொது மக்கள் தமது பிரதேசத்தில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்துதருமாறு கோரி பல்வேறு தரப்பினர்க்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் கையெழுத்திட்டுள்ள மேற்படி மகஜரின் பிரதிகள் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர், யா/ அரசஅதிபர், மருதங்கேணி பிரதேச செயலர், பருத்தித்துறைபிரதேசசபைத் தலைவர், வடமராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர், மருதங்கேணி ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் ஆகியோர்க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதில், அடங்கியுள்ள விடயங்கள் வருமாறு,

எமதுகிராமத்துக்கான வீதி மற்றும் உள்வீதிகள் என்பன உடனடியான புனரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

எமது பிரதேசத்தின் பிரதான வளமான மண் அகழப்படுவதைத்தடை செய்ய வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சடலரிப்பிலிருந்து எமது பிரதேசத்தை பாதுகாக்க முடியும்.

எமதுகிராம மக்களின் சுகாதார நலன்களைப் பேணும் பொருட்டு, வைத்திய சேவையை பெறக்கூடியவசதிஉடனடியாகஏற்படுத்தப்படவேண்டும்.

மக்களின் அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலையிலும் தட்டுப்பாடு இன்றியும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மருதங்கேணி ப. நோ. கூ. சங்கக்கிளை ஒன்று எமதுகிராமத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

முன்னர், இவ்வாறானகிளை ஒன்று இங்கு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களின் தொடர்பாடலுக்கு வசதியாக, உப அஞ்சல் அலுவலகம் ஒன்று ஆரம்பிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பாடசாலை வகுப்பறைக் கட்டடங்கள், மலசல கூட வசதி, காணி தொடர்பான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இப்பிரதேசத்தின் மற்றொரு வளமான காடு அழிக்கப்பட்டு விறகுக்காக எடுத்துச் செல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும். (உ)

## சைவசமய விவகாரக் குழு
# நடாத்திய சமய அறிவு
# போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைமாணவர்களுடையே வடமராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு கடந்த ஆண்டு நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**

1 ஆம் இடம் தனபாலசிங்கம் பாலரூபன், யாழ். இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம் பரஞ்சோதி பாமினி, யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் நர்மதா பரமசாமி, யாழ் வேம்படிமகளிர் கல்லூரி.

தகமைபெற்றோர் 07பேர்.

**மத்திய பிரிவு**

1 ஆம் இடம் திருஜானி சிவானந்தன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் கதிரேசபிள்ளை தர்ஸனன், யாழ். இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் மகிழினி சண்முகராஜா, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

தகமை பெற்றோர் 07பேர்

**மேற்பிரிவு**

1 ஆம் இடம் பாரதி குணரத்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் வாருணி காசிலிங்கம், யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

3 ஆம் இடம் நிவேதிகா தர்மலிங்கம், யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்.

தகமை பெற்றோர் 07பேர்

**அதிமேற் பிரிவு**

1 ஆம் இடம கல்பனா ஜீவரத்தினம், யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம் பார்மதி குமாரசாமி, யாழ். யூனியன் கல்லூரி.

3 ஆம் இடம் கிரிசாம்பாள் வேலாயுதபிள்ளை, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

தகமைபெற்றோர்05 பேர்.

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். [உ]

# சங்கே முழங்கு

## விந்தையான விளையாட்டுப் போட்டிகள்

சென்ற 28.02.2001 புதன்கிழமை மருதங்கேணிக் கோட்டப் பாடசாலைகளிற்கிடையிலானகோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி மருதங்கேணி கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டி குடத்தனை அ.த.க. பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலை மாணவர்களும் காலை 8 30 மணிக்கு வந்த போதும் கல்வி அதிகாரிகள் தாமதமாகவே வந்தனர். அது மட்டுமன்றி போட்டி காலை 11.30 மணிக்கே ஆரம்பமானது. கடுமையான வெய்யில் நேரம் இதனால் மாணவர்கள் சுறுசுறுப்பின்றி செயற்பட்டனர். அத்துடன் இப்பிரதேசத்தில் சுமார் 80 வீதமான மாணவர்கள் உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். இதனால் எத்தனையோ மாணவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களோ மற்றும் முக்கிய ஆவணங்களோ மீட்க முடியாத நிலை ஏற்பட்டது யாவரும் அறிந்த விடயமே.

ஆனால் அன்று நடந்த கோட்ட மட்டப் போட்டியில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத மாணவர்களை போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கவில்லை. இதனால் இம் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இச் செயலானது ''வெந்த புண்ணில் வேல் பாச்சுவது போல் உள்ளது'' இவர்களின் விசேட அடையாள அட்டையை பார்த்து போட்டிக்கு அனுமதித்திருக்கலாம். அத்துடன் வலயக் கல்விப்பணிமனையினால் அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபத்தின்படி இடம் பெயர்ந்த மாணவர்கள் அவர்கள் தற்பொழுது கற்கும் பாடசாலைகளின் சார்பாக போட்டியில் பங்குபற்றலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது ஆனால் இம் மாணவர்களிற்கு பல்வேறு காரணங் காட்டி அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் பல திறமையான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமன்றி இதில் ஏற்பட்ட பெரிய குறை என்னவென்றால் ஒரே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களையே தீர்ப்பாளராகவும் நடுவராகவும் கடமையாற்றும்படி பணித்தது. அப்போட்டியில் அப்பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றியதும் குறிப்பிடத்தக்கதே. அத்துடன் இப்போட்டிக்கு ஒலிபெருக்கி வசதி எதுவும் செய்யப்படவில்லை. நடுவர்களாகச்செயற்பட்ட ஆசிரியர்கள் போட்டி விதிகளையும் போட்டிக்கான மாணவர்களையும் உரத்த குரலில் அழைத்ததை காண முடிந்தது. இதிலிருந்து என்ன விளங்குகின்றதென்றால் இப்பிரதேச கல்விச் செயற்பாட்டிலோ அல்லது ஏனைய செயற்பாட்டிலோ அதிகாரிகள் விசுவாசமாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை. இந்நிலை தொடருமா?

கே. ஏ. குமார்

# விடிவிற்காக ஏங்கும் குட்டியப்புலம் வாசிகள்
# இவர்கள் வாழ்வில் விமோசனம் ஏற்படுமா?

யுத்த மேகங்கள் கவிந்த இலங்கை மண்ணில் சோதனைகள்; வேதனைகளின் மத்தியில் கல்விக்கு பெயர் பெற்றது யாழ்ப்பாண மண் என்று கற்றோராலும் மற்றோராலும் போற்றப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வளர்ச்சி காணத் துடிக்கும் கிராமமே குட்டியப்புலம் கிராமமாகும்.

**சிறை வாழ்வு**

நாகரிகத்தின் உச்சிக்கு உலகம் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் எந்த விதமான வசதிகளுமற்று விவசாயத்தை மட்டுமே தமது ஜீவனோபாயமாகக்கொண்டு வாழும் இக் கிராம மக்கள் எந்த வித வெளியுலக தொடர்பும் அற்ற சிறை வாழ்க்கை வாழ்வது போல வாழும் வாழ்க்கை வேதனைக்குரியதே

இக்கிராமத்தின் மேற்கு எல்லையாக திடற்புலம் அமைந்துள்ளது. வடக்கே செல்வநாயகபுரம் உள்ளது. கிழக்கில் நவக்கிரி தெற்கில் நிலாவரை காணப்படுகிறது. இக்கிராமத்திற்குசீரான போக்குவரத்துப்பாதை எதுவும் கிடையாது;

**வசதிகளற்ற பாடசாலை**

இக்கிராமத்தில் குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை எந்த விதமான அடிப்படை வசதிகளும்மற்ற நிலையில் மரங்களின் கீழ் வகுப்புகளை நடத்திக் கொண்டு கஷ்டத்தின் மத்தியிலும் இயங்கி வருகிறது.

300 மாணவர்கள் வரையில் கற்கும் இப்பாடசாலையில் ஆசிரியர், மாணவர்களுக்கு ஒழுங்கான கதிரை மேசைகள கூடக்கிடையாது. ஆனாலும் கல்விப்பணி தங்கு தடையின்றி தொடர்கின்றது.

கூட்டுறவுச்சங்கம் ஒன்று, உப-தபாற்கந்தோர் ஒன்று ஆலயமொன்று ஆகியன இக் கிராமத்தில் இயங்குகின்றன.

**மண்குடிசைகள்**

வயாவிழானின் கிழக்கு எல்லையில் காணப்படும் இக் கிராம மக்களில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்கிறார்கள்.

சுமார் 150 குடும்பங்கள் மட்டுமேஇங்குவசிக்கின்றனர். கல்வீடுகள் பெயரிற்கு ஒரு சில மட்டுமே காணப்படுகின்றன. பெரும் பாலானவை மண் குடிசைகள்தான். மலசல கூட வசதிகள் எவையும் இல்லை

**சந்தை வாய்ப்பு**

விவசாயஉற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்துவது என்பது இக் கிராம மக்களிற்கு மிகக் கஷ்டமான ஒன்றாகவே உளளது. அச்சுவேலிக்கோ அல்லது நீண்ட தூரம் பயணம் செய்து சுன்னாகத்திற்கோ செல்ல வேண்டும்.

**வைத்திய வசதி**

மருத்துவ நிலையம் எதுவும் இக்கிராமத்தில் கிடையாது. பிரசவ நேரங்கள் மற்றும் நோய் ஏற்படும் வேளைகளில் இக் கிராம மக்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்,

சிரமத்தின் மத்தியில் அச்சுவேலி வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை போக்குவரத்து வசதி இன்மையால் மரண ஆபத்து ஏற்படும் வாய்ப்புகள் நிறைய உண்டு.

யுத்த அரக்கனின் சே[illegible] பசிக்கு யாழ்ப்பாணம் உள்ளாகினும் கூட அபிவிருத்திப்பணிகளும் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

**உடனடித் தேவைகள்**

வானளாவ கட்டிடங்கள் கட்டும் நகரப்புறப் பாடசாலைகளுக்கும் இன்று குறைவில்லை. ஆனால் இக்கிராமத்தின் ஒரேயொரு பாடசாலையின் அபிவிருத்தி, இக்கிராமத்திற்கு பொதுப்பாதை அமைத்தல் என்பன உடனடித் தேவையாக உள்ளது.

இது விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டத்தில் கூட விடயம் கொண்டு வரப்பட்டுள்ளது. நிறைவேற்றித் தருவதாக பெயரளவில் உறுதி மொழியும் கொடுக்கப்பட்டது.

ஆனால் இதுவரையில் காரியம் எதுவும் உருப்படியாக நடந்ததாக இல்லை.

எனவேஇக்கிராம மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நலன் விரும்பிகள் அக்கறை கொள்வது அவசியமானது மட்டுமல்ல மனிதாபிமானத்தேவையும் கூட;

நீர்வையூரான்

## கண்ணிவெடிகள் மீட்பு

மட்டுவில் தெற்கு பகுதியில் இராணுவ பொறியியல் பிரிவினர் மேற்கொண்ட தேடுதலின் போது 16 கண்ணிவெடிகளும் 3 மோட்டார் குண்டுகளும் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதென விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

## முன்கூட்டி வழங்குக

(யாழ்ப்பாணம)

சித்திரைப் புத்தாண்டையொட்டி ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத ஓய்வூதியக் கொடுப்பனவை முன்கூட்டியே வழங்குமாறு கொழும்புஓய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் ஓய்வூதியம் வழங்கும் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார் உ-3

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கென பங்கீடு செய்யப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் இன்று பி.ப 3மணிக்கு ஈ பி டி பி யாழ் மாவட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன

இவ் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தற்கான நிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது, (உ-110)

# இலவசப் பாடப் புத்தகங்களில்

# திரிபு படுத்தப்பட்ட தமிழர் வரலாறு

## அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்களில் தமிழர்களுடைய வரலாறுகள் முற்றாக திரிபுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமையாழ்/வண்ணைநாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபத்திரிகையாளர் மகாநாட்டில் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இம்மகாநாட்டில் த.ஆ.சங்கத்தின் சிரேஷ்டதுணைப் பொது செயலாளர் த. பஞ்சலிங்கம்,கல்விகலை கலாசார செயலாளர் செ. பாலசிங்கம் உட்பட பலர்கலந்துகொண்டனர். இவ் விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை வரலாற்றிலே விஜயனுக்கு முன்னர் இங்கு வாழ்ந்த இயக்கர், நாகருடைய வரலாறு முற்றாக மறுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதிப்பதாக விஞ்ஞானப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறுதமிழருக்கு.தமிழ் மாணவருக்கு எதிரான கல்விச் செயற்பாடுகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த ஆசிரியர் சமூகம் முன் வரவேண்டும்.

இலவசப்பாடநூல்கள்பகுதி பகுதியாக வருவது பற்றி தாம் கல்வி அமைச்சருடன் கடந்த வருடம்மார்கழி மாதம் இருதடவைகள்பேசிய தாகவும் மார்கழி 15இற்கு முன் சகல புத்தகங்களையும் அவர் அனுப்புவதாகக் கூறியிருந்தார். ஆயினும் முதலாம் தவணை ஆரம்பித்துசிலமாதமாகியும் தமிழ் பகுதிகளுக்கு இன்னமும் 50% புத்தகங்கள் வரவில்லை. இதுபற்றித்தாம் ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள மகஜரில் தெரிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆசிரியர் பதவி உயர்வு. சம்பள நிலுவை போன்றவை ஏனைய மகாணங்களைவிட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காலதாமதமாகவே நடைபெறுகிறது.

இதற்கு மேற்படி செயற்பாட்டு அதிகாரங்கள் ஏனைய மாகாணங்களில் வலயக் கல்விப் பணிமனைகளினூடாகவும் வடக்கு - கிழக்கில் மாகாண மட்டத்திலும் காணப்படுவதே ஆகும்.

இவ் அதிகாரங்கள் இங்கே வலயக்கல்விப் பணிமனைக்கோ. மேலதிகமாகப் பணிமனைகளுக்கோ பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்றார்.

பாடசாலைகளில் கயிற்றில் ஏறுதல், கயிற்றில் நடத்தல், ரயரினுள் புகுந்து செல்லல் போன்ற செயற்பாடுகள் பழக்கப்பட்டு வருகின்றன. இது மாணவரை இராணுவ ரீதியான செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்வதாகஉள்ளது. இது சம்பந்தமாக தாம் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டபோது தாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறு தெரிவிக்கவில்லை என்று கூறியுள்ளனர் எனவே பாடசாலை கல்வித்திட்டத்தில் புதிய சக்திகள் பங்களிப்பதாகக் கருதவேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாடசாலைகள், தமிழ் மாணவருக்கு சிங்களமும், சிங்கள மாணவருக்கு தமிழும் கற்பிக்கும் புதிய கல்விசீர்திருத்த நடவடிக்கைகள் நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

தமது தொழிற்சங்கத்தின் நடவடிக்கைகளினால் கல்விசார் நிர்வாகசபை உத்தியோகத்தர்கள் பலர் தமக்கு ஆசிரியர் சம்பளத்தைப் பெற்றுத் தருமாறு கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மே.மா. கல்விப்பணிப்பாளர்கள்,வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் சம்பளத்திலும் கூடிய சம்பளத்தை சுமார் 1000 ஆசிரியர்கள் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இது தமது தொழிற்சங்கத்திற்கு அரசியலில் உள்ள முக்கியத்துவத்தைக் காட்டுவதாகவும் அவர் கூறினார். (க-2)

# பதவி உயர்வுகளுக்கு

# கணனி அறிவு விசேட தகைமை

## விரைவில் அமுல்

[கொழும்பு]

அரச சேவையில் உள்ள எழுதுவினைஞர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக நடத்தப்படும் தகுதி காண் பரீட்சையில் மாற்றம் கொண்டு வருவதற்கு பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவித்துள்ள அவர் கணனிப் பயிற்சிகள பெற்றுள்ளமை விசேட தகமையாகப் புதிய திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார். (4)

# வவுனியா பூந்தோட்டம்

# படையினரால் முற்றுகை

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம், நலன்புரி நிலையம் உட்பட பல பகுதிகள் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதன் போது இளைஞர், யுவதிகள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட பின்னர் 5 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 5 பேரும் விடுதலை செய்யப்படவில்லை எனவும் இவர்களைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

# மரப் பாலத்தால்

# மக்கள் சிரமம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கண்ணகி அம்மன் கோயிலடித் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள மரப்பாலம் பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருப்பதாக கூறப்படுகிறது.

இது தவிர, தீவகத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து வரும் பயணிகள் படகுகளை இத்துறைமுகத்தில் அணைப்பதிப் பலகஷ்டங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

அனலைதீவு, எழுவைதீவு ஆகியவற்றுக்கு இத்துறைமுகத்தினூடாக மட்டுமே பயணிகள் சென்றுவருதல் மற்றும் பொருட்கள் எடுத்துச் செல்லல் இடம்பெறுவதால் மக்களின் குறை உணர்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்கச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் எனப் பாதிக்கப்படும் பொதுமக்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (உ-75)

# கோப்பாயில் மீண்டும்

# சட்டவிரோத மின் பாவிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் பகுதி மீண்டும் சட்ட விரோதமின் பாவனை அதிகரிப்பினால் சில தினங்களில் மட்டும் ஐந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் செயல் இழந்துள்ளதாக மின்பாவனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மின் பெறப்பட்டு ஒட்டு வேலைகள் நடைபெறுவதாகவும் தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சப்பட்டு வருதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சட்டவிரோத மின் பாவனையால்மங்கலான வெளிச்சத்திலேயே மாணவர்கள் கற்க வேண்டிய அவலம் ஏற்பட்டதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

# வீதி திருத்தம்

(கல்வயல்)

பொலிகண்டியில் இருந்து உடுப்பிட்டிக்குச் செல்லும் வீதி பாவனைக்கேற்ற வகையில் செப்பனிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை நிதிமூலம் இவ் படி வீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (உ-111)

## படையினரிடம

# சரண்

(கொழும்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடிப்பகுதியில் கடந்த 9 ஆம் திகதியன்று நவராசா அர்சுன் என அழைக்கப்படும் 16 வயதுடைய விடுதலைப்புலி உறுப்பினர் படையினரிடம் சரணடைந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ9)

## பாவற்குளத்தில்

# தேடுதல்

(கொழும்பு

பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில், பாவற்குளம் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் அங்கிருந்த 3 கண்ணிவெடிகளை அகற்றியுள்ளனர். (உ-9)

# வரவேற்பு

# உபசாரம்

(மல்லாகம்)

யாழ் மாவட்ட கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு உபசார விழா நா[illegible] பீடாதிபதி இ. கம[illegible]ன் தலைமையில் இ[illegible]ள்ளது. (உ-122)

# ஓவியக் கண்காட்சியில்

# பரிசு பெற்றோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

அகில உலக தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஓவியக் கண்காட்சி ஒன்றினை கடந்த வெள்ளியும்,சனியும் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடத்தியிருந்தது.

இக் கண்காட்சிக்கான ஓவியங்களைத் தெரிவதற்காக இந்நிறுவனம்ஓவியப்போட்டி ஒன்றினையும் நடத்தி அதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பரிசில்களையும் நேற்று முன்தினம் வழங்கியிருந்தது.

நேற்று முன்தினம் நடந்த பரிசளிப்புவிழாவில் பிரதம அதிதியாகமாகாண சுகாதார பிரதிப்பணிப்பாளர் செல்வி. உமாசிவபாத சுந்தரம்கலந்து கொண்டார்.

மேற்படி போட்டியில்முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களின் பெயர் விபரம் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது அவர்களுடைய ஓவியத்திற்கான இலக்கமும் அருகில்தரப்பட்டுள்ளது

**பிரிவு-1**

முதலாம் இடம் தே. தாட்சாஜினி (யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்) 40

இரண்டாம் இடம் ச. சுஜீபன் (யாழ். இந்துக் கல்லூரி) 10

மூன்றாம் இடம் இ. சிவாகர் (யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி) 27

**பிரிவு-2**

முதலாம் இடம் ர. பிரகாஸ் (யாழ். செங்குகந்தா இந்துக் கல்லூரி) 29

இரண்டாம் இடம் ச. கஜந்தன் (யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) 4

மூன்றாம் இடம் ம. சைமன் (யாழ். மத்திய கல்லூரி) 14

**திறந்த ஓவியப் பிரிவு**

முதலாம் இடம் இ. யுகேதர் (கரவெட்டி) 3

இரண்டாம்இடம் சி சிவாணி யாழ். பல்கலைக்கழக வணிக பீடம்) 25

மூன்றாம் இடம் செ. கோமதி [யாழ். மத்திய கல்லூரி ஆசிரியை] 35

மேலும் ஒவ்வொரு பிரிவிலும் தலா 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. (க-2,6)

# சிறுவர்கள்சிகிச்சைநிலையம்

# நெடுந்தீவில் திறப்பு

(நெடுந்தீவு)

சிறுவர்களின் உடல், உள மேம்பாட்டை விருத்தி செய்யும் முகமாக சிகிச்சை நிலையம் ஒன்று நெடுந்தீவு மேற்கு பழனிபாபு கல்வி நிலையத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நான்கு வயது முதல் 14 வயது வரையிலான சிறுவர்களின் உடல், உள மேம்பாட்டை கருத்திற் கொண்டே மேற்படி நிலையம் அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்தமாதம்நெடுந்தீவுக்கு விஜயம் செய்த சுகவாழ்வு நிலையப் பிரதிநிதிகள் நெடுந்தீவின் புவியிற்தன்மைபோக்குவரத்து வசதி இன்மை குடித்தொகைச் செறிவு என்பவற்றை கருத்திற் கொண்டு முதலாவது நிலையத்தை நெடுந்தீவு மேற்கில் அமைப்பதெனவும்,காலக் கிரமத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நெடுந்தீவு கிழக்கில்ஒருநிலையத்தை அமைப்பதென ஒப்புதல்வழங்கியுள்ளனர்.

பெற்றோரை இழந்தோர், தந்தையின் மதுப்பாவனையால் விரக்தியுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் வறுமையிலும் வறுமையான சிறுவர்கள், பாடசாலைக் கணிப்பீடுகளில் அனைத்துப் பாடங்களிலும் குறைவான மதிப் பெண் பெறுகின்ற சிறுவர்கள் வயதிற்கேற்ற வளர்ச்சியற்ற சிறுவர்கள்போன்றோருக்கு இந் நிலையத்தில் சிகிச்சையளிக்க முன்னுரிமை வழங்கப்படும்எனசுகவாழ்வுநிலைய ஊக்குவிப்பாளர்கள் தெரிவித்தனர்.

இந் நிலையத்தினூடாக ஒரு பகுதிசிறுவர்கள் மட்டுமே நன்மையடைவர். நெடுந்தீவு கிழக்கிலும் ஒரு நிலையத்தை அமைப்பதனூடாக அனைத்துப்பகுதி.அனைத்துச் சிறுவர்களும் நன்மையடைவர் என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. [க-82]

# பாலத்தின் இருமருங்கிலும்

# மீன் பிடிக்கத் தடை

(கல்வயல்)

வல்லைப் பாலத்தின் இரு பகுதிகளிலும் இரு நூறு மீற்றர் தூரமான பகுதி பாதுகாப்புக் கருதி மீன் பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக படையினரால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேச எல்லை சிவப்பு நிறக் கொடிகளால் எல்லையிடப் பட்டுள்ளதுடன் அந்த எல்லைப்பகுதிக்கு அப்பால் மீன்பிடித்தொழிலை தாராளமாக மேற்கொள்ளலாம் எனவும் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதி ஆழம் குறைந்த பரவைக் கடலாக இருப்பதனால் களங் கண்டி வீச்சு வலை முறைகளில் மீன்பிடித் தொழில் நடைபெறுவது வழக்கம். (உ-111)

# பாலியல் நோய்த்தடுப்பு

# தொடர்பான 3 மணி நேர

# வீடியோ விவரணப்படம்

(யாழ்ப்பாணம்)

பாலியல் நோய்க் கட்டுப்பாடு சம்பந்தமாக கொழும்பில் தயாரிக்கப்பட்ட, மூன்று மணிநேர வீடியோ விவரணப் படம் சுகாதாரக் கல்விப் பணியகத்தால் யாழ் போதனா வைத்தியசாலை பாலியல் நோய் கட்டுப்பாடு நிகழ்ச்சி திட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பார்த்துப் பயன் பெறவிரும்புவோர், யா/ போதனா வைத்தியசாலை அறை இல. 33 இல் பாலியல் நோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. நக்கீரனுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை அண்மையில் பாலியல் நோய் கட்டுப்பாடு சம்பந்தமான பிரசுரங்கள் இங்கு எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

# சிரமதானம்

(மல்லாகம்)

இணுவில் சந்தியிலிருந்து பரராசசேகரப் பிள்ளையார் கோயில்வரையுள்ளவீதிக்கரையோரங்கள் அப்பகுதி மக்களினால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது. (உ-122)

## இன்று ஒரு தகவல்

# அறிந்து உணரவேண்டும்

ஒருவருக்கு நாம் ஒரு உதவியைச் செய்தால், அதைப் போன்ற உதவியை அவர் நமக்குத் திருப்பி எப்போது செய்வார் என்று எண்ணிக் கொண்டே இருக்கக்கூடாது. நல்ல குணமுடையவருக்குச் செய்த உபகாரமானது அவருடைய மனதில் என்றும் நிலைத்து நிற்கும் அதாவது கல்லின் மேல் உளியைக் கொண்டு செதுக்கிய எழுத்தைப்போல உயர்ந்துநிற்கிறது தென்னை மரம் அந்த மரத்தின் அடியில் நாம ஊற்றுவதோ சாதாரண தண்ணீர் ஆனால் அதுவோ உரிய காலத்தில் குலை குலையாக இனிப்பான இளநீரைத் தலை சாய்த்துக் தருகிறது அதைப் போன்றதே, நம்மிடம் உதவி பெற்ற நல்ல குணமுடைய சான்றோரின் பண்பாகும்.

தாழம்பூவின் இதழ்களைப் பார்க்கும் போது, நமக்குப் பிரமிப்புஏற்படுகிறது ஆனால் மகிழம் பூவோ சிறிய இதழ்களையே கொண்டு இருக்கிறது இருந்தாலும், அது தாழம் பூவைவிட மிகுதியான நறுமணத்தைக் கொண்டிருக்கிறது. கடல் பார்ப்பதற்கு அளவில் பெரியது தான். அதனால் என்ன பயன்? நம்முடையஉடம்பிலுள்ள அழுக்குப் போகும் படியாக அக்கடல் நீரில் குளிக்க முடிகிறதா?இல்லையே! அதேசமயத்தில், அக்கடலின் அருகேஇருக்கும் சிறிய குழியில் இருந்து சுரக்கும் நீர் நல்லநீராகஇருக்கிறது. நாம் குளிக்கவும் உதவியாக இருக்கிறது இவை எதனைக் காட்டுகிறது. ஒரு பொருளின் உருவத்தைக் கண்டு அதனை மதிக்கக் கூடாது. மதிப்பிடக்கூடாது.

இவ்வுலகில் உருவத்தில் பெரியவராகத் தோன்றுபவர், உள்ளத்தில் சிறியவராக இருக்கக் கூடும். உருவத்தில் சிறியவராகக் காட்சியளிப்பவர் உள்ளத்தில் பெரியவராக இருக்கக்கூடும். இப்படி இருப்பது இவ்வுலகில் கண்கூடு. ஆதலால் எதனையும், எவரையும் தவறாக எண்ணி எள்ளி நகையாடக்கூடாது. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

நீரோடையில் கொக்கு நின்றவண்ணம் தவமிருக்கிறது. எதற்காக? பெரிய மீனுக்காக அந்த மீன்கிடைக்கும் வரையில் உறங்குவது போல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும். கொக்கு தூங்குகிறது என்று எண்ணிக் கொண்டு மீன்கள் அதன் அருகே ஓடி ஆடிக் கொண்டிருக்கும் கொக்குக்குத் தேவையான தன்பசியைப் பூர்த்தி செய்ய கூடியதுபெரிய அளவான மீன்தானே. அதனைக் கண்டவுடன் வெடுக்கெனப் பிடித்துப் பசியாறும்.

அதைப் போலவே, சிலர் பேசாமல் இருப்பதாலேயே சிறியவர்கள், எதற்கும் உதவாதவர்கள் என்று நினைத்து விடக்கூடாது அப்படிப்பட்டவரை எளிதில் வெற்றி கொண்டு விடலாம் என்ற நினைப்போடு நெருங்கி விடக்கூடாது. அப்படிநெருங்குபவன் எவனும் தீமையையே அடைவான். நன்மையை அடைய முடியாது அமைதி, புயலுக்கு அறிகுறியாகும் என்ற உண்மையை உணர்ந்திருக்க வேண்டும்.

க.க. இராமலிங்கம்

# குடா நாட்டில் தொடரும் துயரம்
# நாற்பது தினங்களில் மாத்திரம்
# மிதிவெடியினால் 13 பேர் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஆண்டில் மட்டும்44 பேர் மதிவெடிகளில் சிக்கி தமது கால்களில் ஒன்றை அல்லது இரண்டையும் இழந்துள்ளதாக ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் இவ்வாண்டின் தொடக்க 40 தினங்களில் மாத்திரம்மிதிவெடிகளில் சிக்கி 13 பேர் தமது கால்களை இழந்துள்ளதுடன் கால்கள் இழக்கும் சம்பவம் தொடர்கதையாகி நீண்டு செல்கின்றது.

1961 ஆம் ஆண்டு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் யாழ். குடாநாடு வந்தது முதல் இற்றைவரை 350 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது கால்களை இழந்துள்ளனர்.

இவர்களில் 50 இற்கும் மேற்பட்டோர் மாணவர்களாவர், இதை விட மிதிவெடியில் சிக்கி 12 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மிதி வெடிகள் 50 ஆண்டுகள் வரை ஆயுட்காலம் கொண்டவை என்பதால் மிதிவெடி அபாயம் கூடிச் செல்வதற்கேற்ற சூழ்நிலைகளே அதிகம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## பூந்தோட்டப் பகுதியில் ஆயுததாரி கைது

(கொழும்பு)

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் கடந்த 9 ஆம் திகதியன்று ஆயுததாரி ஒருவரைப் படையினர் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டதெனவும் அவர் தற்போது பொலிஸாரால் மேலதிக விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் விஷேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(இணுவில்)

மல்லாகம் விசாலாட்சி. வித்தியாசாலை வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டி, நாளை புதன்கிழமைபி.ப.2 00.மணிக்குபாடசாலை மைதானத்தில் அதிபர் நூமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது'

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கம் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைகல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. கணேசலிங்கம், தெல்லிப்பழை பொதுச் சுகாதார பரீசோதகர் என். சச்சிதானந்தம் கௌரவ விருந்தினராக வலிவடக்கு பிரதேசபை, தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-49)

## அரச மருத்துவர் சங்கம் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு முஸ்தீபு

(கொழும்பு)

வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அரசாங்க மருத்துவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார அமைச்சருடன் இடம் பெறவுள்ள சந்திப்பின்போது இணக்க நிலை ஏற்படாதவிடத்து மேற்படி தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

## மத்திய மருந்தகத்தில் மருந்துக்குத் தட்டுப்பாடு

(இணுவில்)

இணுவில் மத்திய மருந்தகத்தில் அவசிய மருந்துகளுக்கு கூட தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் அங்கு நாளாந்தம் செல்லும் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்ஏமாற்றத்துடன் திரும்புவதையும், வைத்தியர் கொடுக்கும் மருந்துச் சீட்டுடன் தனியார் மருந்து விற்பனை நிலையங்களுக்கு அலைவதையும் அவதானிக்க முடிகிறது. (உ-49)

## உடுவிலில் மாதிரிவிவசாய விற்பனை நிலையம் அமைப்பு

(இணுவில்)

உடுவில் சமநல சேவைகள் திணைக்களத்தினால் இணைந்த மாதிரி விவசாய விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

மாதிரி விவசாய விற்பனை நிலையம் அமைக்கப்படுவதன் மூலம் மேற்படி பகுதியினை அண்டிய விவசாயிகள் நியாய விலையில் தமக்குத் தேவையான விவசாய உள்ளீடுகள், கிருமிநாசினிகள் உர வகைகள், விவசாயஉபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-49)

## வீதி திருத்தம்

(மல்லாகம்)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியைச்செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய தற்போது தார் ஊற்றப்பட்டு வருகின்றது. (உ-122)

## சிறைக் கைதிகளுக்கு, புனர்வாழ்வு அளிக்க புதிய திட்டம் அமுல்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் இதர குற்றங்களைப் புரிந்ததின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் அனைவருக்கும் புனர்வாழ்வளிக்கும் தேசிய திட்டமொன்று அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

சிறைவாசம் செய்யும் கைதிகள் அனைவரையும் சமூக சேவையில் ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். (உ-4)

## முறையான அனுமதியின்றி குழந்தைகள்வைத்திருத்தல் தண்டனைக்குரிய குற்றம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு முறையான அனுமதியின்றி குழந்தைகளை எடுத்துச் செல்பவர்கள், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அனுமதியின்றி குழந்தைகளை எடுத்து வந்து வைத்திருப்பவர்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1980 இல் கீட்நகரில் நிறைவேற்றப்பட்ட சர்வதேச குழந்தைகள் கடத்தல் பிரகடனத்திற்கமையவே அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது

இப் புதிய நடவடிக்கைக்கமைய முறையான அனுமதியின்றி வேறு நாடுகளிலோ அல்லது இலங்கையிலோ தடுத்து வைக்கப்பட்டுள்ள குழந்தைகள் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பான சட்டமூலமொன்று நீதியமைச்சினால் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென்றும் விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (உ-4)

## அணிபிரிந்து மோதல்

(இணுவில்)

மதுபோதையில் காணப்பட்ட இளைஞர், அணி பிரிந்து மோதிய சம்பவம் அண்மையில் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றது.

மேற்படி மோதல் சம்பவத்தினால் அப்பகுதியூடாகச் சென்ற பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உட்பட்டனர். (உ-49)

## கந்தரோடையில் கைகலப்பு படையினர் முறியடிப்பு

(மல்லாகம்)

கந்தரோடைப் பகுதி இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள இளைஞர் குழுக்களிடையே கடந்த வியாழனன்று ஏற்பட்ட அடிதடி இராணுவத்தினரின் தலையீட்டினால் தீர்க்கப்பட்டதாய் தெரியவந்துள்ளது.

இவ் அடிதடிச் சம்பவத்தின் போது காயமுற்ற பலர் சங்கானை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும்,

மேற்படி அடிதடி காரணமாக மேற்படி பகுதி மக்கள் பலத்த பீதிக்குள்ளாகியிருப்பதாகவும் மேலும் அறியமுடிகிறது. (உ-122)

## நூல் நிலையம் அருகில் தேங்கும் கழிவுநீர் வாசகர் அவஸ்தை

(இணுவில்)

மருதனார்மடம் சந்தையின் கழிவுநீர் உடுவில்பிரதேசசபையின் உபநூல் நிலையம் பகுதியில்தேங்கி நிற்பதனால் நூல் நிலையம் நாடிச்செல்வோர் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

இதன் காரணமாக நூல் நிலையத்தில் இருந்து அறிவுத் தேடலில் ஈடுபடுவோர் மிகுந்த அவஸ்தைகளுக்கு மத்தியில் மூக்கைப் பொத்திய வாறு இருப்பதை காணமுடிகிறது.

இதுதவிர, மருதனார்மட சந்தைக்கழிவுகள் தகுந்த நேரத்தில் அப்புறப்படுத்தப் படவில்லை எனவும் பொது மக்கள் தரப்பில் குறை தெரிவிக்கப்படுகிறது. (உ-49)

## அலரி விதை உட்கொண்ட பெண்மரணம்

(யாழ்ப்பாணம்)

அலரி விதை உட்கொண்டு ஆபத்தான நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் யா/போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமானார்.

தும்பளை றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் சத்தியபாமா (வயது 26) என்ற இளம் குடும்பப் பெண்ணே நேற்று முன்தினம் இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ரி. ஜெயரட்ணம் மேற்கொண்டார். (உ-104)

## கழுத்தில் சுருக்கிட்டு குடும்பஸ்தர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த குடும்பஸ்தரான ப.வஞ்சிதன் (வயது35) சுருக்கிட்டுத்தற்கொலை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மரணமடைந்தவர் சற்று சித்தசுவாதீனம் அற்றவர் எனத் தெரியவந்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்ட மேற்படி சடலம் மரண விசாரணைகளின் பொருட்டு யாழ் போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-10)

# புலிகளுக்கு நிதி சேகரித்த அமைப்புக்குத் தடை
## சிங்கப்பூர் அரசு அறிவிப்பு

[சிங்கப்பூர்]

சிங்கப்பூரில் விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த அமைப்பொன்றை அந்நாட்டு அரசு தடை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளிடம் பயிற்சிபெற்ற, சிங்கப்பூரில் பிரஜா உரிமை பெற்ற ஒருவரின் தலைமையில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பில் அவ்அமைப்பு ஈடுபட்டு வந்ததெனவும், தற்போது அதன் செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் சிங்கப்பூர் உள்துறை அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-9)

# முதலமைச்சர் பதவியைக் குறிவைத்து அ. இ. அ. தி. மு. க கூட்டணியில் த. மா. கா காங்கிரஸ் இணைவு

(சென்னை)

நீண்ட இழுபறி நிலைமைக்குப் பின்னர் அ. இ. அ தி. மு. க. வுடனான கூட்டணியில் த. மா. காவும் காங்கிரஸ் கட்சியும் நிலைத்திருப்பது உறுதியாகி உள்ளது.

அ. இ. அ. தி. மு. காவுடனான தொகுதிப் பங்கீட்டில் த மா. காவுக்கும் காங்கிரஸிற்கும் 47 இடங்கள் வழங்கப்பட்டுள்ளது

இதில் 32 இடங்களில் த. மா. கா. போட்டியிடும் என அதன்தலைவர் மூப்பனார் அறிவித்துள்ளதாவது இதனை உறுதிப்படுத்தி இருக்கிறது.

இதேவேளை தற்போது புதுச்சேரி யூனியன் பிரதேச கூட்டணி அரசிற்கு தலைமை ஏற்றுள்ள காங்கிரஸ் தனக்கு முதன்மைக்கட்சி என்ற அந்தஸ்த்து தரப்பட வேண்டும் என்றும் கூட்டணி வெற்றி பெற்றால்முதலமைச்சர்பதவி தனக்கே வேண்டும் எனவும் கோரியுள்ளது.

ஆனால் செல்வி ஜெயலலிதா முதல் இரண்டரை ஆண்டும் முதலமைச்சர் பதவியை பா. ம. காவுக்கு விட்டுக்கொடுப்பதாக அதனுடன் ஒப்பந்தம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் விடுதலைப்புலிகள் ஆதரவுக்கட்சியான பா. ம க உள்ள கூட்டணியில், காங்கிரசும், த மா. காவும் 'கூட்டுச்சேர முன்வந்தாலும் உள்வீட்டுப் பூசல் தொடர்ந்த வண்ணமே இருக்குமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

# என்றுமில்லாத வகையில் இஸ்ரேல் அமைச்சரவை அங்கத்தவர் அதிகரிப்பு

(ரெல்அவிவ்)

இஸ்ரேலில் தற்போது அமைக்கபபட்டுள்ள புதிய அமைச்சரவையில் என்றுமில்லாத வகையில் அதிகப் பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இஸ்ரேலின் 11 ஆவது பிரதமராக பதவியேற்ற ஏரியல் ஷரோனின் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் மொத்தம் 26அமைச்சர்கள் பதவி வகிக்கின்றனர்.

அத்துடன் 120 பாராளுமன்ற அங்கத்தவர்களையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமராக கடந்த புதனன்று பதவியேற்ற ஷரோன் தனது கன்னி உரையில் பலஸ்தீனர்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு பலஸ்தீனர்கள் வன்முறைகளை கைவிட வேண்டும் எனக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஜனநாயகத்தை உறுதி செய்ய ஈரான் அதிபர் திடசங்கற்பம்

(தெஹ்ரான்)

ஈரானிய அதிபர் முகமட் கத்தாமி நாடாளுமன்றில் உரையாற்றியபோது, எதிர்காலத்தில் நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்வதை தவிர வேறு வழி இல்லை என்றும் கூறியுள்ளார்.

தான் எவ்வளவு காலம் பதவியில் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்களோ அத்தனை காலமும் தாம் அதிபராக இருப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் வரும் யூன் மாதம் முற்பகுதியில் இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்துள்ளார். (உ-7)

# மத்தியகிழக்கில் சமாதானம் விரைவில் மலரும்?

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கில் அமைதியைக் காணும் முயற்சிக்கு புத்துயிர் ஊட்டும் வகையில் இஸ்ரேல் பலஸ்தீன நாடுகளிற்கிடையில் பேச்சுநடைபெறும் வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாக இரண்டுதரப்புச்செய்திகளும் தெரிவிக்கின்றன.

இதேவேளை இஸ்ரேல் புதிய பிரதமர் ஏரியல் ஷரோனின் புதிய அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் பலஸ்தீனத் தலைவருடன் பேச தான் இன்றும் தயார் இல்லை என்று கூறியுள்ளார். (உ-7)

# இந்தோ. பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மூவர் பலி; பலர் காயம்

(ஜகார்த்தா)

யாக் ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது இந்தோனேஷிய பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் பலியாகியதுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

போர்னியாவில் உள்ள பலன்கராயா என்னும் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதிக்கு விஜயம்செய்த இந்தோனேஷிய ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது அவரது வாகன அணிமீதும தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## செய்திப்பரல்

★ அமெரிக்க உயர்தரப் பாடசாலை ஒன்றில்துப்பாக்கிப் பிரயோகத்தால் இரண்டு பேரைக் கொன்றும் 13 பேரைக் காயப்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட 15வயது மாணவன் கடந்த புதனன்று நீதிமன்றில் ஆஜரானான்.

★ இஸ்ரேலின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ஏரியில் ஷரோன் கடந்த புதனன்று பாராளுமன்ற கூட்டத்தொடரில்கலந்துகொண்டார்.

★ சீனாவில் மூன்றாவது மக்கள் சீனக்காங்கிரஸின் கூட்டத்தொடர் கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

★ இந்தோனேஷியாவின் கலிமன்ரன் மாநிலத்தில் உள்ளூர்டயகாஸ் இனத்தவருக்கும் அங்கு வந்து குடியேறிய மாதுரா இனத்தவர்களுக்கும் இடையிலானமோதலில் இதுவரை 460 பேர் உயிரிழந்துள்ளனர். உ-9

## உலக தரிசனம்

# பஸ் வண்டி குடைசாய்ந்து பலர் பலி

[புதுடில்லி]

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பஸ்வண்டி ஒன்று குடைசாய்ந்து தீப்பற்றியதில் பலர் பலியாகினர்.

பயணிகளை ஏற்றிவந்த தனியார் பஸ் வண்டிஒன்று கார்ஒன்றுடன் மோதி கவிழ்ந்ததில டீசல் டாங்கி வெடித்து சிதறியதால் தீப்பற்றிய பஸ்ஸில் பயணம் செய்த அனைவரும் உடல் கருகி பலியாகினர். (உ-7)

# பிரிவினைவாதிகள் தாக்கு ஒருவர் பலி பலர்காயம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பிரிவினைவாதிகள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலியாகியதுடன் 15 பேர்வரை காயமடைந்துள்ளனர்.

இராணுவவாகனம் ஒன்றை இலக்குவைத்து எறியப்பட்ட கைக்குண்டு தவறி பொதுமக்கள் பயணம் செய்த பேருந்தினுள் வீழ்ந்து வெடித்ததனாலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற வன்செயல்களில் 13 பேர் பலியாகியிருந்தனர் இதில் 5 பேர் பிரிவினைவாதிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# இந்தோ. ஜனாதிபதியை பதவி விலகக் கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

[ஜகார்த்தா]

இந்தோனேஷியாவின் ஜனாதிபதி அப்துல் றஹ்மான் வாஹிட் பதவி விலக வேண்டுமெனக் கோரி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாஹிட் உலக நாடுகளுக்கான சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த வேளை நாட்டின் உப ஜனாதிபதியாக கடமையாற்றிய மேகவதி சுவர்ணபுத்ரி ஆட்சியை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை மேற் கொண்டுள்ளார் என்று செய்தி வெளிவந்தமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (உ-9)

# சிலியில் நிகழ்ந்த, மனித உரிமை மீறல் விசாரிக்க நீதிமன்ற அனுமதி

(சண்டியாகோ)

சிலியின் முன்னாள் ஜனாதிபதி அகஸ்டோபினோஷேயின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள குறித்து நீதி விசாரணைகளை மேற்கொள்வதற்கு அந்நாட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதிவழங்கியுள்ளது

இதேவேளை கொலை முயற்சிகளுக்குத் திட்டமிட்டது மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை தொடர்புபடுத்தி பினோஷே மீது வழக்கிட முடியாது எனக் கூறப்பட்டுள்ளது. (உ- 9)

# எண்ணெய் தாங்கிகள் தடம் புரள்வு

(புதுடில்லி)

இந்தியாவின் இலங்கையாற்றுக் கரையின் குளித்துறையிடைப்பகுதியில் வெள்ளிக்கிழமையிரவு 6 எண்ணெய்த் தாங்கிகள் தடம்புரண்டுள்ளன.

இச்சம்பவத்தை அடுத்து கன்னியா குமரி திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில் ரயில் போக்குவரத்துப் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. (உ-79)

# திருக்குர்ஆன் எரிப்பு

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வரும் புத்தர் சிலை உடைப்பினை ஆட்சேபித்து இந்தியாவில் உள்ள இந்துகள் சிலர் டில்லியில் உள்ள ஐ. நா தூதரகம் முன்பாக புனித திருக்குரானை எரித்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர். (உ-9)

# கலைஞர் கிண்டல்; ஜெயா சீற்றம்
# கட்சிகளின் சொற்போர் வலுக்கிறது

(சென்னை)

சட்டசபைத் தேர்தல் நெருங்கும்தருணத்தில் அ. இ. அ தி மு க, தி. மு. க. கருத்துப் போர் வலுவடைந்து வருவதாக அங்கிருந்துகிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில், பா. ம. கா. வும், அ இ. அ. தி மு. க வும் தமிழகத்தில் மாறி மாறி ஆட்சி செய்யும் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்திக்கு.

இது என்ன விக்கிரமாதித்தன் கதையா?, என தி. மு க. தலைவர் மு. கருணாநிதி பரிகாசம் செய்திருந்தார்.

கருணாநிதியின் பரிகாசப் பேச்சினால் சீற்றம் மிகுந்துள்ள அ. இ. அ. தி. மு க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா, தமிழக மக்களுக்கு சிறந்த ஆட்சியை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் எமது நோக்கம், நாட்டையாள்வது முக்கியமல்ல என்று கூறியிருப்பதுடன்,

தி மு. க. ஆட்சியில் காணப்படும் ஊழல்கள் குறித்தும் விரிவாக வெளியுலகத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

அத்துடன், தமது கூட்டணிக் கட்சிகளிடையே காணப்படும் புரிந்துணர்வு அடிப்படையிலான சுமுக உறவுகள் குறித்தும் உறுதிப்படுத்தியுள்ளார். (உ-9)

# கொக்குவில் இந்துவில் அவைக்காற்று நிகழ்வு
## வ. இ. சங்கீதசபைஏற்பாட்டில்

[மல்லாகம்]

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியில், காலை 9மணி தொடக்கம் பி.ப. 4.30 வரை வட இலங்கை சங்கீத சபையினரால் அவைக்காற்று நடத்தப்படவுள்ளது.

மிருதங்க ஆற்றுகை, நாடக ஆற்றுகை என்பன அன்றைய தினம் இடம்பெறவுள்ளதால் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-122)

விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப்
பெறின்
-குறள்-

வலம்புரி

## எழுதாமல் திருமணமா?

அரசு-புலிகளுக்கிடையிலான சமாதானப்பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் பெரும் பிரயத்தனம் மேற் கொண்டு வருகிறார். எனினும் பேச்சு வார்த்தை மேசையில் இரு தரப்பினரையும் இருத்துவதில் எங்கோ சிக்கல்கள் உண்டென்பது மட்டும் தெளிவு.

பயிர்களை நாட்டிய விவசாயி இருள்கட்டிய வானத்தைப் பார்த்து எங்கே மழை வராதோ என ஏங்குவது போன்று மக்களும் எப்போது சமாதானம் வருமென எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். இருள் கூட்டிய வானம் மழை தராமல் ஏமாற்றுவது போல் இலங்கை மண்ணில் கருக்கட்டியுள்ள சமாதானம் உயிர்ப்பின்றி கூழாகி விடுமோ என்ற ஏக்கமும் மக்கள் மத்தியில் இருக்கவே செய்கிறது.

அரசாங்கம் புலிகளுடன் பேசுவதற்குத் தயாரென அறிவித்தாலும், நடைமுறையில் பேச்சுக்கேற்ற சூழ்நிலையை தோற்றிவிப்பதாகத் தெரியவில்லை மாறாக மீண்டும் மீண்டும் புலிகள் மீது ஏதோ ஒரு வகையில் குறை காண்பதிலும் பழையவற்றைப் புரட்டிப் பார்ப்பதிலுமே அரசு அக்கறை கொண்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையை புலிகளுடன் பேசுவதன் மூலமே தீர்க்க முடியுமென்ற உண்மையை அரசும் சர்வதேசமும் உணர்ந்து கொண்ட பின்பும் புலிகள் மீது அரசாங்கம் கொண்டுள்ள காழ்ப்புணர்வை தற்போது வெளிப்படுத்துவது சமாதான முயற்சிகளுக்கு உகந்ததல்ல.

அதேவேளை சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே அரசு தயாரித்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசு ஒப்பமிடுவதைத் தவிர்த்து, நேரடியாகவே பேசுவோம் எனக் கூறுவது கல்யாண எழுத்தில்லாமல் திருமணத்தைத் செய்வோம் என்பது போலுள்ளது.

எழுதாமல் நடத்தும் திருமணம் எந்நேரமும் சறுக்கலாமல்லவா அதைத் தான் அரசு விரும்புகிறது போலும்.

அரசின் இத்தகைய சறுகல் போக்கிற்கு அண்டை நாடான இந்தியாவும் மறைமுகமான காரணமென்பது ஏற்றுக் கொள்ளப் படவேண்டிய உண்மைகளில் ஒன்றாகும்.

---

# குழந்தை வளர்ப்பிற்குத் தாய்ப்பால் முக்கியம்

## ஊட்டச்சத்துள்ள உணவுகளும் சேர்தல் அவசியம்

### மருத்துவ விளக்கம்

ரீ. அலமேலுமங்கை B. Sc
(சத்துணவியல் நிபுணர்)

தாய்ப்பாலில் எல்லா ஊட்டச் சத்துக்களும் நிறைந்துள்ளது. இப்போது 75% தாய்மார்கள் நாகரிகத்தின்காரணமாகக் குழந்தைகளுக்குச் சரிவரப்பால் கொடுப்பதில்லை, தாய்ப்பால் சுத்தமானது: பாதுகாப்பானது. குழந்தைக்குத்தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் பாதுகாப்பு உணர்வையும், பாசத்தையும் உண்டாக்க முடிகிறது.

**குழந்தைப் பருவம்**

குழந்தைப் பருவத்தில் வளர்ச்சி வேகம் அதிகமாக இருக்கிறது. எனவே, குழந்தையின் உணவு மீது பெற்றோர் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும் முதல் நான்கு மாதங்கள்வரை குழந்தையின் வளர்ச்சிக்குத் தாய்ப்பாலே போதுமானது இப்பருவத்தில் குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய கலோரிச் சத்து பெரியவர்களைவிட அதிகமாகத் தேவைப்படும். ஒரு நாளைக்குக் குழந்தைக்குத் தேவையான கலோரிச் சத்து 108 K. Cal. 1Kg உடலின் எடை: ஆனால் பெரியவர்களுக்கு 40KCal 1Kg உடலின் எடைதான் தேவைப்படுகிறது.

முதல் மாதத்தில் குழந்தை உண்ணும் உணவில் 50%சக்தி அடிப்படைத் தேவைக்குப் பயன்படுத் தப்படுகிறது. 25% செயலுக்கும் மற்றும் 25% வளர்ச்சிக்கும் தேவைப் படுகிறது. குழந்தை நடக்கவும், தவழவும தொடங்கிய பின் தாய்ப்பால் மட்டும் போதுமானதல்ல. வேறு சில உணவுகளும் கொடுக்க வேண்டும்.

**தாய்ப்பால்**

தாய்ப்பால் மாவுச் சத்தாக இருக்கக்கூடியதுலேக்டோஸ், குளுக்கோஸ், கெலக்டோஸ் சத்தைக் கொண்டுள்ளது. தாய் குழந்தைக்குப்பால் கொடுக்கும்போதுபிட்யூட்டரி சுரப்பியிலிருந்து புரோலெக்டின், ஆக்ஸிடோசின் போன்ற சுரப்புக்கள்சுரக்கின்றன. தாயின் இரத்தத்திலிருந்து உருவாகும் குளுக்கோஸ், தாயின் மார்பகத்திலிருந்து லேக்டோஸாக பாலாசஉமிழ்கிறது. குழந்தை பிறந்த 2-3 நாட்களில் தாயின் மார்பகத்திலிருந்து மஞ்சள் நிறத்தில் திரவம் சுரக்கும். இதனைக் கொலஸ்ரம் என்பர். இது புரதச்சத்து நிறைந்தது. இதை அவசியம் குழந்தைக்குத் தர வேண்டும். இதில் குழந்தையைப் பல நோய்களிலிருந்து காப்பாற்றும்தற்காப்புச்சத்து உள்ளது.

குழந்தை பிறந்து 2அல்லது 3நாட்களில் பால்சுரக்கஆரம்பித்து விடும் இது ஆறுமாதம் வரை அதிகரித்துக்கொண்டே போகும். ஒரு நாளைக்கு அரைலீற்றரிலிருந்து இரண்டு லீற்றர் வரை தாய்ப்பால் தாயின் மார்பகத்திலிருந்து சுரக்கின்றது. தாய்ப்பாலில் இரும்புச் சத்துக் கிடையாது. எனவே, குழந்தைக்குஇரத்தச் சோகை வர வாய்ப்புண்டு. பிறந்து நான்கு ஐந்து மாதத்திலிருந்து குழந்தைக்கு இரும்புச் சத்து கொடுப்பது மிகவும் அவசியம். பேரீச்சம் பழம், பழச்சாறு கொடுக்கலாம்.

**பால்**

ஆறு மாதக் குழந்தைக்குத் தாய்ப்பால் மட்டும் போதுமானதல்ல அதனால் மாட்டுப்பாலை ஒரு நாளைக்கு 225மி. லீ இருமுறையாக சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுக்கலாம். சர்க்கரை சேர்ப்பதன்மூலம்குழந்தைக்கு கலோரிச் சத்து சேர்கிறது.

**பழச்சாறு**

ஒறேஞ்ச், சாத்துக்குடி, திராட்சை போன்ற பழங்கள் இரும்புச் சத்து நிறைந்து உள்ளவை. இது தாய்ப்பாலில் இல்லை. எனவேகுழந்தைக்கு இப்பழச்சாற்றினை இரண்டு தேக்கரண்டி அளவுக்குக் கொடுக்கலாம்.

**மீன் ஈரல் எண்ணெய்**

இதில் விற்றமின் ஏ. டீ. நிறைந்து இருக்கிறது. இதனைப் பாலில் தேக்கரண்டி அளவு கலந்து குழந்தைக்குக் கொடுக்கலாம்.

**கெட்டியான ஆகாரம்**

நன்கு மசிந்த உணவுகளை அதாவது பருப்பு சாதம், இட்லி, தயிர் சாதம், போன்றவைகளை எட்டு மாதங்களிலிருந்து கொடுக்க ஆரம்பிக்கலாம் குழந்தைக்கு வீட்டிலேயே கஞ்சி சமைத்துக் கொடுக்கலாம்.

**கஞ்சி செய்வது எப்படி?**

பச்சைப்பயறையே அல்லது கேழ் வரகையோ இரவில் ஊற வைத்துப் பின் அதைத் தண்ணீரிலிருந்து எடுத்து ஒரு உலர்ந்த துணியில் கட்டி வைக்க வேண்டும். அது 48 மணி நேரத்தில் முளைகட்டியவுடன் சூரிய வெளிச்சத்தில் காய வைத்து அதை வாணலியில் நன்கு வறுத்து எடுக்க வேண்டும் பின் அதை மாவாக அரைத்துவிடவேண்டும். ஸ்டார்ச் (மாச் சத்து) என்பது மால்டோஸாக மாறும் இதனால் அமிலோஸ் சுரப்பி அதிகரிக்கும். இதை அமிலோஸ் நிறைந்த உணவு எனலாம். இதனைக் கஞ்சியாகச் செய்து குழந்தைக்குக் கொடுப்பதன் மூலம் கலோரிச் சத்து அளவு அதிகரிக்கும்.

**காய் கறிகள்**

நன்கு சமைத்துவேகவைத்த காய் கறிகளைக் குழந்தைக்குக் கொடுக்கலாம். இதனால் விற்றமின், தாதுக்கள் உருளைக்கிழங்கு, கரட், கீரை போன்ற காய்கறிகளைக் கொடுக்கலாம் இவற்றில் நார்ச் சத்தும் புரதமும் உள்ளன.

**பயறு வகைகள்**

பயறுகளை வேகவைத்துப் பொங்கலாகவோ அல்லது பருப்பு சாதமாகவோ நெய்யுடன் குழந்தைக்குக் கொடுக்கலாம்.

**அசைவ உணவு**

முட்டை மஞ்சள் கருவை சிறிது கொடுககலாம் ஒவ்வாமை எதுவும் இல்லாமல் இருந்தால் சிறிது சிறிதாக உயர்த்தி ஒரு முட்டை அளவு கொடுங்கள். குழந்தைக்குப் புரதம், இரும்புச்சத்து, விற்றமின், மற்றும் கொழுப்புச் சத்துக் கிடைக்க முட்டை வழி செய்கிறது.

---

## ஆலயத் திருநாள்

(செம்பியன்பற்று)

புலோலி கிழக்கு புனித சூசையப்பர் ஆலயத் திருநாள் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை இரவு திருநாள் பிரார்த்தனையும், 18 ஆம் திகதி ஞாயிறு காலை திருநாட் திருப்பலியும் கூடு சுற்று வைபவமும் இடம்பெற வுள்ளது. (உ- 42)

---

## தவக்காலச் சிந்தனை - 14



''இறைவன் பலியை அன்றி இரக்கத்தையே விரும்புகிறார்.'' தகனப்பலி செலுத்த தன்னார்வம் கொண்ட மக்கள் தன் அயலானுக்கு அன்புசெலுத்தத்தவறுகின்றனர். சொதோம், கொமரா மக்கள் போல் பாவத்தில் வாழ்கின்றனர். இதனால் இறைவன் அவர்களிடம் அயலானுக்கு அன்பு செய்து வாழவும் பாவ வாழ்வை விட்டு பக்தி நெறியில் திழைக்கவும் அழைப்பு விடுக்கின்றார். பரிசேயரும், சதுசேயரும் எப்போதும் ஆணவம் மிக்கவர்களாகவும் பொது இடங்களில் முதன்மையும் புகழ் மற்றும் மரியாதை தேடுபவர்களாகவும மற்றவர்களையும் மதிக்காத தன்மை கொண்டவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். சட்டத்திற்கும் சம்பிரதாயங்களுக்கும் சமூகத்தில் முதலிடம் கொடுக்கத் தெரிந்த அவர்களுக்கு மனித நேயத்திற்கு, தம் மனங்களில் இடம்தர தெரியவில்லை. நாமும் இன்றைய சமூகத்தில் ஆஸ்திக்கும் அந்தஸ்திற்கும், பதவிக்கும், பணத்துக்கும், சாதிக்கும், சமயத்திற்கும் முதலிடம் கொடுத்து மனித நேயத்திற்கு நம் மனத்தில் இடம் தராமல் அதை மண்ணில் புதைக்கின்றோமா என சிந்திப்போம்.

காவலன்

---

# விழா எடுத்தால் மட்டும் போதாது விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

## மகளிர் தின விழாவில் ஜெனோவா உரை

[ஈச்சமோட்டை]

சிறுவர்கள் துஷ்பிரயோகத்தில் அதிகம் பாதிப்புக்குள்ளாக்கப்படுவது பெண் பிள்ளைகளே இது மிகவும் வேதனைக்குரியது.

அண்மையில் மருதனார் மட ஆச்சிரமத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி உரையாற்றிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த திருமதி ஜெனோவா அல்பிரட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; மகளிருக்கு விழா எடுக்கும்நாங்கள் அவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதோடு உரிய பாதுகாப்பை சமூக மட்டத்தில் வழங்கி அவர்களது எதிர்காலத்தை ஏற்றம் பெறச் செய்ய வேண்டும். ''பெண்கள் நாட்டின் கண்கள்'' என்பதை வார்த்தைகளால் சொன்னால் போதாது. எம் மனதில் ஆழமாகப் பதித்து அதன்படி நடக்க வேண்டும்.

இன்று பல்வேறுபட்ட புறத்தாக்கங்களும் போரின் கொடூரமும் தாண்டவமாடும் நிலையில் சிறுவர்கள் மோசமாக உடலுள ரீதியில் பாதிப்புக்குள்ளாகின்றனர்:

இதில் சிறுவர் துஷ்பிரயோகமும் முக்கிய இடம் வகிக்கின்றது சிறுவர் துஷ்பிரயோகத்தில் பராயமடையாத சிறுமிகள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

எதுவும் அறியாத பச்சிளம் பிள்ளைகளை இவ்வாறான துர்நடத்தைகளில் ஈடுபடுத்துவதால் அவர்களுக்கு உடல் ரீதியான பாதிப்பு மட்டுமல்லாது உள ரீதியானபாதிப்பும் ஏற்பட்டு எதிர்காலம் இருள் மயமாகி விடுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்படும் சிறுமிகள் வாழ்வில் நம்பிக்கை இழந்து சமூகக் கட்டமைப்புக் கலாசாரங்களை இழந்து இருண்ட வாழ்வியலுக்குள் தள்ளப்படுகின்றார்கள். எதிர் கால சமூகச் சீர்கேடுகள் தோன்றிவிடுவதற்கு இது வித்திடுகின்றது.

எனவே இன்றைய சிறுவர் சிறுமியர் நாளைய எதிர்காலத்து தலைவர்கள் என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதோடு உரிய முறையில் அவர்களை வழிநடத்த வேண்டியது சமூகத்தின் ஒவ்வொருவரதும் கடமையாகும் என்றார். (உ-59)

## மின்சார சபைக்கு புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் தலைவர் அர்ஜுனா தரணியகல தனது பதவியிலிருந்து விலகியதையடுத்து அவரின் இடத்திற்கு தற்போது மின்சார சபையின் உபதலைவராகப் பதவி வகிக்கும் கே அரிநந்த நியமிக்கப்பட்டவுள்ளார். (ந-4

எண்ணம்போல வண்ண நகைகளை மங்கையர் மனங்குளிர செய்து பெற்றுக்கொள்ள
நியூ நகுலா ஜுவல்லறி
74. கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
[கி-1575]

# ஆசிரியர்களின் இடமாற்றம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்!!

## மாநாட்டில் மகாசிவம் உரை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாடு சங்கத்தின் யாழ் மாவட்ட பிரதிநிதி வ. கணேசமூர்த்தி தலைமையில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

எழுச்சி மாநாட்டில் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம் உரையாற்றுகையில் நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாக சங்கத்தின் எழுச்சி மாநாடு கடந்த காலங்களில் நடாத்தப்படவில்லை.

இவ் எழுச்சிமாநாடு மூன்று கட்டங்களைக் கொண்டது. முதலாவது மாநாடு யாழ் மண்ணில் நடைபெறுகிறது, மற்றையவை எதிர் வரும் 19ந் திகதி வன்னியிலும் 30' 31ந் திகதிகளில் திருகோணமலையிலும் இடம்பெறுமென்றும் தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர்கள் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார் அவரினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் வருமாறு:

★ ஆசிரியர்களின் தரக் கணிப்பீட்டு முறை நீக்கப்பட வேண்டும்.

★ ஆசிரியர்களுக்குரிய நிலுவைகள் கொடுப்பனவுகளை வழங்குவதுடன் பதவி உயர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ பாடப்புத்தக விநியோகம் சீராக்கப்படுதல்.

★ ஆசிரியர்களின் இடமாற்றம் ஒழுங்குபடுத்தப்படுதல்.

★ ஆசிரியர் தரம் ஒன்றுக்கானசம்பள உயர்வை கிடைக்க வகைசெய்தல்.

★ புதிய பாடத்திட்டத்தை மாற்றியமைத்தல். போன்றவற்றுடன் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை யொன்றுக்கு பாடரீதியாக எண்பது உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இவ் எழுச்சி மகாநாட்டில் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை சிறப்புவிருந்தினராகவும், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ, மகாலிங்கம், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் வ, இராசையா, தீவகவலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா ஆகியோர் கௌரவவிருந்தினராக கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் பெரும் திரளான ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் உட்படசங்கத்தின் மூத்த உறுப்பினர்கள்பலரும் உரையாற்றினர்.

[இ-6-77]

### விடுதலைப். . .

றுவதற்கான நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் பலவீனமடைந்துள்ளார்கள் என்பது குறித்து சிறிதளவான ஆதாரமே கிடைத்துள்ளது.

ஆனால் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்குப் பலமாகவும் உறுதியாகவும் புலிகள் இருப்பதாகத் தோன்றுகிறது.

ஆயுதங்களிலும் தந்திரோபாயமான தூரநோக்கும் கணிசமான நிதிப்பின்னணியும் காணப்படுகின்றது என்றும் ஜெனரல் மைடோலோமோர் தெரிவித்தார். (ம)

## இருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக் கிழமை சுண்டுக்குளி தடை முகாமில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட மூவரில் இருவர் விசாரணைகளின் பின் விடுவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தை சேர்ந்த விவேகானந்தன் ரமேஸ் (வயது32) கொழும்புத்துறை வீதியாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி குணாகரன் ஆகியோரே 512வது படைப் பிரிவினரால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட மூன்றாமவரான பாண்டியன்தாழ்வைச்சேர்ந்த நல்லையா நவநிலவன் தொடர்ந்தும் விசாரணைகளின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

# பத்திரிகையாளர் திருச்செல்வத்தை உடனடியாக விடுதலை செய்க!

## சர்வதேச ஊடக உரிமைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கடந்த தை மாதம் 2ம் திகதிமுதல்தடுத்து வைக்கப்பட்டுள்ள 'வலம்புரி' பத்திரிகையின் செய்தியாளர் சுப்பிரமணியம் திருச்செல்வத்தை விடுதலைசெய்யுமாறு 'ரிப்போட்டஸ்சன்ஸ் புறொன்ட்றியஸ்' என்ற சர்வதேச ஊடகஉரிமைக்குழு நீதியமைச்சர் பட்டிவீரக்கோனை கடிதமூலம் கோரியுள்ளது.

அக்கடிதத்தில் பத்திரிகையாளர் திருச்செல்வத்தின் மீதான விசாரணையை துரிதமாக நடாத்தி அவரைவிடுதலை செய்யவேண்டும்,

அவரை நீண்ட காலமாக தடுத்துவைத்திருப்பதுஏனைய பத்திரிகையாளர்களை எச்சரிக்கைசெய்வதாகஉள்ளதென்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (இ)

# மகாலிங்கத்தின் மறைவு சைவத்தமிழுக்குபேரிழப்பு!

## திரிலோகன் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளரும், இந்து சமயப் பேரவையின் உப தலைவருமான ஆ.மகாலிங்கம் அவர்களின் திடீர் மறைவு சைவத்தமிழ் மக்கள் அனைவரையுமே பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு வலிமேற்கு பிரதேசசபைதலைவரும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளருமான ந.திரிலோகநாதன், பிரதேச செயலர் மகாலிங்கத்தின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் இரங்கல் செய்தியில் போர்க்காலச் சூழ்நிலையில் பிரதேச செயலர் ஆற்றிய சேவையை குடாநாட்டு மக்கள் என்றுமே மறக்க முடியாது. அவர் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய சேவை எண்ணிலடங்கா சுயநலவாதிகள் வாழும் இப் பூமியில் பொது நலத்துக்காக தன்னை அர்ப்பணித்த இப் பெரியாரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பதில் அமைச்சராக அனுருத்த

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா ஜேர்மனி சென்றுள்ளதால் பதில் நிதி அமைச்சராக பேராசிரியர் ஜீ. எல் பீரிசும், பதில் பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்த ரத்வத்தவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

### சந்தேக---

பவரையே26ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஜெரால்கணிஜெயசேனாஉத்தரவிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், முன்னரும்கைதுசெய்யப்பட்டவர் என்றும், இவரைமீண்டும் கைது செய்து தடுத்து வைத்திருப்பது நீதிக்கு புறம்பானது எனவே இவரை மேல்நீதி மன்றில்பிணையில் விடுவிக்கமனுத்தாக்கல் செய்ய வேண்டுமென்றும் நீதிபதி தெரிவித்துள்ளார். [ம]

### ஜேர்மன்---

விடயங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பின் போதுஎடுத்தாரயப்படும். அத்துடன் அரசாங்கத்தின்அமைதித்தீர்வுக் கொள்கையை ஜேர்மனி அரசாங்கம் ஆதரிக்கவேண்டுமெனவும் ஜனாதிபதி கோருவார்.

ஜேர்மனியில் தங்கியிருக்கும் நாட்களில் பேளின்நகரில் இடம்பெறும் பல்வேறுநிகழ்வுகளிலும் ஜனாதிபதிகலந்து கொள்வார்எனத் தெரியவருகிறது.

இதேவேளை புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசிக்கும் தமிழ்த்தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களையும்இவ் விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திக்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறிமாவோ பண்டாரநாயக்காபிரதமராக இருக்கும் போது 1974ம் ஆண்டு ஜேர்மனிக்கு சென்ற பின் ஜனாதிபதி சந்திரிக்கா இப்போது ஜேர்மனி சென்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-இ)

### வரவு-செலவுத்

துச் சாத்தியமற்றவையாகும். பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

நாட்டைத் தற்போது பீடித்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு தீர்வாக அமைய மாட்டாது.

டொலரின் பெறுமதி நாள்தோறும்அதிகரித்துவருகிறது. ஆனால் அரசு பொருளாதாரத்தைச் சீராக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### அரசு . . .

அரசாங்கத்தால் அவ்வமைப்புக்கு வழங்கப்பட்டு வந்த பொருளாதார உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

முன்னாள் தமிழ்ப்போராளிக்குழுக்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்ததனால் அரசாங்கத்தால் அக் குழுக்களின் பாதுகாப்புக்காக ஆயுதமும் பணமும் வழங்கப்பட்டு வந்தது. இவ் உதவிகள் தமிழ்க்குழுக்களான ரெலோ, ஈ.பி.டி.பி, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியவற்றுக்கு கிடைத்து வருகின்றன.

இதனடிப்படையில் இக் குழுக்களின் பாதுகாப்புக்கு ஆயுதங்களும் உறுப்பினர் ஒருவருக்கு தலா 1500ரூபா பணமும் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்பொழுது ரெலோ இயக்கம் அரசுக்கு ஆதரவு வழங்காது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதால் அவ்வமைப்பின் ஆயுதங்கள் களையப்பட்டுள்ளதுடன்பணஉதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. (இ)

### எரிக்சோலிடம்...

வார்த்தைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைஅரசாங்கம்தற்போது மேற்கொண்டு வருகிறது.

பேச்சுவார்த்தைகளைநடத்துவதற்கான திகதியைநிர்ணயம் செய்துஅதனை அரசுக்கு அறிவிக்குமாறு அரசாங்கம் விடுதலைப் புலிகளைக்கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகள்சரியான முறையில் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயித்த பின்னரே அரசாங்கத்தால் பேச்சுவார்த்தைக்கான காலஅட்டவணையைத் தயாரிக்கமுடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் யோசப்பரராஜசிங்கம் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் டி. எம். ஜயரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண வெளிப்பாடும், திகதி நிர்ணயமும் விடுதலைப் புலிகளிடமிருந்து நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் மூலம் அரசுக்குக் கிடைக்கப் பெற்றதும், அதுகுறித்து அரசு திர ஆலோசித்து உடனடியாக பேச்சுவார்த்தையை அரம்பிக்கத் தயாராக உள்ளது என்றும் அமைச்சர் டி. எம். ஜயரத்தின மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)

### வதிவிட ---

மன்ற உறுப்பினர் பி.சாந்தகுமார தலைமையில், ரெலோ நடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இராசா குகனேஸ்வரன், விநோதலிங்கம் உட்பட பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதத் தலைவர்களும பிரஜைகள் குழுவினரும் இதில் இடம் பெற்றுள்ளனர்

இது தொடர்பாக ஆரம்ப கலந்துரையாடல் ஒன்று நேற்று வவுனியா இறம்பைக் குளம் கத்தோலிக்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. (ம)

# வடக்கு - கிழக்கில் போசாக்குத் திட்டம் இவ்வாண்டு அமுல்

(வவுனியா)

வடக்குகிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறைஆகிய மாவட்டங்களில் யுனிசெவ் அமைப்பும் திட்டஅமுலாக்கல் அமைச்சும் இணைந்து இவ்வாண்டு பங்களிப்புடன்கூடிய பாங்கான போஷாக்குத்திட்டம் ஒன்றை அமுல்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தை மேற்படி ஆறுமாவட்டங்களிலும்அமுல்படுத்துவதற்கு இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதை ஆராய்வதற்கு அண்மையில் கொழும்பில் கருத்தரங்கொன்றும் நடாத்தப்பட்டது.

இத்திட்டம் அமுலாக்கப் படவுள்ள ஆறு மாவட்டங்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களாகும். (ம)

அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை உடனுக்குடன் செய்து தருபவர்கள்
நியூ ராதிகாஸ் நகைமாளிகை
189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கி/ 1576)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.